# திண்டிவனம் நகராட்சி

## அவசரக் கூட்டம்

## முன்னிலை : திருமதி.ஆர்.நிர்மலா., நகர மன்ற தலைவர்.

02.12.2025 செவ்வாய்க்கிழமை அன்று காலை 10.30 மணிக்கு திண்டிவனம் நகராட்சி அலுவலகத்தில் நகர மன்ற கூட்டரங்கில் நடைபெற உள்ள நகர மன்ற அவசரக் கூட்ட பொருள் விபரம்.

| வ. எண் | பொருள் விபரம் |
|---|---|
| 1 | திண்டிவனம் நகராட்சி வார்டு எண்.33ல் உள்ள கர்ணாவூர் பாதையில் அமைந்துள்ள பாலம் பழுதடைந்து பொதுமக்கள் மற்றும் பள்ளி மாணவ மாணவியர்கள் போக்குவரத்திற்கு மிகவும் அவதிப்பட்டு வந்த நிலையில் அப்பகுதி பொதுமக்கள் மற்றும் நகரமன்ற உறுப்பினரின் கோரிக்கைக்கிணங்க அப்பகுதியில் பைப் கல்வெர்ட் அமைத்து கொடுக்க மதிப்பீடு ரூ.3.50 இலட்சம் வருவாய் நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :-</u>** மன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண். 2884/2025/இ1)<br>தீர்மானம் எண் : 126 நாள் : 02.12.2025<br>அலுவலக குறிப்பு பதிவு செய்யப்பட்டது. |
| 2 | நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (தேர்தல்) அரசாணை நிலை எண். G.O (MS) No.120, நாள். 26.06.2025 மற்றும் ந.நி.கு வழங்கல் துறை அரசாணை நிலை எண் G.O (MS) No.119, நாள். 26.06.2025-ன் படி தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகள் அமைப்புகள் சட்டம் 1998 (தமிழ்நாடு சட்டம் 9/1998) தமிழ்நாடு சட்டம் 30/2025-ன் மூலம் மேற்கொள்ளப்பட்ட திருத்தம் பிரிவு 37 (1) (1-a)-ன் படி அறிவிப்பும் மாவட்ட ஆட்சியர் மூலம் பரிசீலிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்ட மாற்றுத்திறனாளியான திரு. சரவணன் த/பெ கெம்பு , பஜனைக் கோவில் தெரு, திண்டிவனம் என்பவர் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம். 5,5.6. 13933/2022/42 , நாள். 24.11.2025-ன் மூலம் தேர்வு செய்யப்பட்டு உத்தரவு பெறப்பட்டதின் அடிப்படையில் திரு. சரவணன் த/பெ திரு.கெம்பு என்பவர் 28.11.2025 அன்று மாலை 5.30 மணியளவில் இந்நகராட்சியின் நகர் மன்ற உறப்பினராக பதவியேற்றக்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :-</u>** மன்றம் அனுமதிக்கலாம். **ந.க.எண்.749/எப்1/2025.**<br>தீர்மானம் எண் : 127 நாள் : 02.12.2025<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| 3 | இந்நகராட்சி பகுதியில் 186 எண்ணிக்கை சிறுமின் விசை மோட்டார்கள் உள்ளது. இவற்றில் ஏற்படும் பழுதுகள், காயில் கட்டுவது ஆகிய பணிகள் ஒப்பந்தத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஒப்பந்தம் முடிந்து விட்டதால் மேற்கண்ட பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டி இருப்பதால் ஏற்கனவே இப்பணியினை செய்து வந்த M/s KS&Co ஒப்பந்ததாரருக்கு நீட்டிப்பு செய்து வழங்கி |

Scanned with OKEN Scanner

| | |
|---|---|
| | பணியை மேற்கொள்ளவும் அதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.5.00 இலட்சம் குடிநீர் நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :-</u>** மன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண். 2587/2025/இ2)<br>தீர்மானம் எண் : 128 நாள் : 02.12.2025<br>அலுவலக குறிப்பு பதிவு செய்யப்பட்டது. |
| 4 | திண்டிவனம் நகராட்சியில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வந்த பாதாள சாக்கடை பணிகள் முடிவு பெற்று வீட்டு இணைப்புகள் வழங்கும் பணிகளுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே இதுகுறித்து பொதுமக்களிடம் அறிவிப்பு வழங்க இருபதாயிரம் எண்ணிக்கையும் இணைப்பு வழங்குவதற்கான விண்ணப்ப படிவம் இருபதாயிரம் எண்ணிக்கையும் அச்சடிக்க அரசு அங்கீகாரம் பெற்ற THE GEORGE TOWN MULTIPURPOSE INDL CO-OP, Chennai அச்சகத்தில் அச்சடிக்கப்பட்டு பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதற்கான செலவினம் சம்மந்தப்பட்ட அச்சகத்திற்கு வழங்க ரூ.377600-ஐ நகராட்சி வருவாய் நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>(ந.க.எண். 3478/2025/இ2)<br>தீர்மானம் எண் : 129 நாள் : 02.12.2025<br>அலுவலக குறிப்பு பதிவு செய்யப்பட்டது. |
| 5 | இந்நகராட்சி வார்டு எண்.8, ஆஸ்பிட்டல் ரோடு பெண்கள் விடுதியின் எதிரில் உள்ள பொதுக்கழிப்பறை மோட்டார், ஆஸ்பிட்டல் அவசர சிகிச்சை எதிரில் உள்ள சிறுமின் விசை மோட்டாரின் மோட்டார் மற்றும் அய்யாசமி தெரு அப்புகுட்டி தெரு சந்திப்பில் உள்ள மோட்டார்கள் பழுதடைந்துள்ளதை சரி செய்ய கழற்றி பார்த்ததில் மேற்படி மோட்டார்கள் மீண்டும் பயன்படுத்த முடியாத நிலையில் (Condemn) உள்ளது.<br>எனவே மேற்படி இடங்களில் உள்ள 3 மோட்டார்களையும் புதியதாக மாற்றவும் அதற்கான லேபர் சார்ஜ் உட்பட அதற்கான தோராய செலவினம் ரூ.1.25 இலட்சத்திற்கு நகராட்சி குடிநீர் நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :-</u>** மன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண். 2587/2025/இ2)<br>தீர்மானம் எண் : 130 நாள் : 02.12.2025<br>அலுவலக குறிப்பு பதிவு செய்யப்பட்டது. |
| 6 | இந்நகராட்சி வார்டு எண்.3, பாரதிதாசன் நகர், நாகாத்தம்மன் கோவில் அருகில் உள்ள சிறு மின் விசை மோட்டார் பழுதடைந்ததை சரி செய்ய கழற்றி பார்த்ததில் மேற்படி மோட்டார்கள் மீண்டும் பயன்படுத்த முடியாத நிலையில் (Condemn) உள்ளது. புதிய மோட்டார் மாற்றவும் அதற்கான தோராய செலவினம் ரூ.36000-ஐ நகராட்சி குடிநீர் நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :-</u>** மன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண். 2587/2025/இ2)<br>தீர்மானம் எண் : 131 நாள் : 02.12.2025<br>அலுவலக குறிப்பு பதிவு செய்யப்பட்டது. |

Scanned with OKEN Scanner

| | |
|---|---|
| 7 | இந்நகராட்சியில் வடகிழக்கு பருவமழையினை முன்னிட்டு 1–33 வரையிலான வார்டுகளில் உள்ள கால்வாயினை தூர்வாறும் பணிக்காக ரூ.12.00 இலட்சம் வருவாய் நிதியில் செலவினம் மேற்கொள்ள அனுமதி பெறப்பட்டு, பணி நடைபெற்று வந்த நிலையில் மேலும் இப்பணிகளை நீட்டிப்பு செய்து தூர்வாரப்படாத கால்வாய்களை தூர்வாரி சுத்தம் செய்திட ரூ.5.00 இலட்சம் கூடுதல் வருவாய் நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :–**<br>மன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண்.3745/2025/இ2)<br>தீர்மானம் எண் : 132 நாள் : 02.12.2025<br>அலுவலக குறிப்பு பதிவு செய்யப்பட்டது. |
| 8 | இந்நகராட்சி வார்டு எண்.1, சந்தைமேடு பகுதியில் உள்ள பொதுக்கழிவறையில் உள்ள மோட்டார் பழுதடைந்ததை சரி செய்ய கழற்றி பார்த்ததில் மோட்டார் மிகவும் பழுதடைந்து மீண்டும் பயன்படுத்த இயலாத நிலையில் (Condemn) உள்ளது.<br>எனவே மேற்படி பொது கழிவறைக்கு புதியதாக 1.0HP நீர் மோட்டார் வாங்கி பொருத்தவும் லேபர் சார்ஜ் உட்பட அதற்கான தோராய செலவினம் ரூ.31500–ஐ நகராட்சி குடிநீர் நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :–** மன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண். 2587/2025/இ2)<br>தீர்மானம் எண் : 133 நாள் : 02.12.2025<br>அலுவலக குறிப்பு பதிவு செய்யப்பட்டது. |
| 9 | திண்டிவனம் நகராட்சியில் புதியதாக பணியில் சேர்ந்துள்ள உதவி பொறியாளர், பொதுப்பணி மேற்பார்வையாளர்கள் மற்றும் பணி ஆய்வர்களுக்கு பணி புரிவதற்கான இருக்கை வசதிகள் கணினிகள் மற்றும் பொறியியல் பிரிவில் உள்ள தடுப்பை அகற்றி, ஒரே வடிவில் அறையினை புனரமைப்பு பணிகள் மேற்கொள்ள மதிப்பீடு ரூ.9.90 லட்சத்தை வருவாய் நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :–** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2590/2025/இ1)<br>தீர்மானம் எண் : 134 நாள் : 02.12.2025<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| 10 | திண்டிவனம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் 15வது நிதிக்குழு மான்யம் 2023–2024 ஆம் நிதி ஆண்டு Untied Grant நிதியின் கீழ் வார்டு எண்.04ல் ரோஷனை பகுதியில் சமுதாய கூடம் கட்டிடப் பணிக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டு, பணி நடைபெற்று வருகிறது. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் வேலூர் அவர்களின் அறிவுரையில் மேற்படி Structural Design–ல் PT Slab–ன் வரைபடம் பெறப்பட்டதை பணியின் PT Slab மற்றும் காங்கிரிட் போன்றவற்றின் கட்டுமானப் பணிகளை சரிபார்த்து விரிவான ஆய்வறிக்கை வழங்க Annamalai University, Professor of Civil and Structural Engineering, Chidambaram அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டு கட்டுமானப் பணிகளை சரிபார்த்து விரிவான Vetting சான்று வழங்கியதற்கான கட்டணம் ரூ.53100–ஐ வருவாய் நிதியில் செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :–** மன்றம் அனுமதிக்கலாம்.(ந.க.எண்.1483/2023/இ1)<br>தீர்மானம் எண் : 135 நாள் : 02.12.2025<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

Scanned with OKEN Scanner

| | |
|---|---|
| 11 | 072 திண்டிவனம் சட்ட மன்ற தொகுதி மற்றும் விழுப்புரம், இந்திய தேர்தல் ஆணையம் , நியூடெல்லி கடித எண். 23/2025 /இ ஆர்.எஸ் தொகுதி II, நாள்.27.10.2025.ன் படியும் சட்ட மன்ற தேர்தல் பணிகள் மாவட்ட ஆட்சியர் அவர்களின் உத்தரவின் படி நடைபெற்று வருகிறது. 14.11.2025 முதல் படிவம் பெறப்பட்டு பொதுமக்களுக்கு வழங்கப்பட்டும், பெறப்பட்டும் வருகின்றது. இப்பணி சீரான முறையில் மேற்கொள்ள ஆட்டோ விளம்ரபம் வாகனம், இப்பணியில் ஈடுபடுவோர்களுக்கு உணவு, குடிநீர், சிற்றுண்டி, தேநீர் ஆகியவை வழங்க மாவட்ட ஆட்சியர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், தேர்தல் தொடர்பான அனைத்து பணிகளும் நகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது,<br>இப்பணி 14.11.2025 முதல் இந்நாள் வரையிலும் மேற்கொள்ளப்பட்டு வருவதற்கான ஆகும் தோராய செலவினம் ரூ.15.00 இலட்சத்துக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம்.**ந.க.எண்.4609/எப்1/2021**<br>தீர்மானம் எண் : 136 நாள் : 02.12.2025<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| 12 | திண்டிவனம் நகராட்சி ந.க.எண்.3287/எப் 1 /2024, நாள்.19.11.2024-ஆம் தேதிய கடிதத்தின் அடிப்படையிலும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் விழுப்புரம் அவர்களின் கடித ந.க.எண்.2270/2024/ வி மா2 , நாள் 9.11.2024.ன் படி கிடங்கல் கிராமம் சர்வே எண்கள் 298/1 , 298/3 பகுதி, 298/4 பகுதி மற்றும் 298/4 பகுதி நகரளவை வார்டு டி , பிளாக் 11, நகரளவை எண்.22/1-ல் 1.93 ஏக்கர் பரப்பளவிற்கு நிலப்பயன் மாற்றம் செய்ய தீர்மானம் எண் 241 நாள். 13.01.2025.ல் நகர்மன்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மனுதாரரின் இதே எண்ணிட்ட மனு நாள்.24.11.2025 ஆம் கடிதத்தில் மனுதாரருக்கு 298/1 பகுதி மட்டும் உரிமையாவதாலும், 298 /1 பகுதி என திருத்தம் செய்து தர கோரப்பட்டதால், சர்வே எண் 298/1 என தீர்மானம் நிறைவேற்றப்பட்டதினை நகரசார் ஆய்வரின் 01.12.2025ஆம் தேதிய குறிப்பின்படியும் நகரளவை ஆவண பதிவேட்டின் படியும், பட்டா பதிவு மாறுதல் உத்தரவு டி.ஆர்.எண் 2021/0153/07/000148TR, நாள். 13.03.2021.ன் படி 298/1 பகுதி என தீர்மானம் நிறைவேற்றிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கலாம். **ந.க.எண்.3287/எப்1/2024**<br>தீர்மானம் எண் :137 நாள் : 02.12.2025<br>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

**ஓம்/- ஆர். நிர்மலா**
தலைவர்
திண்டிவனம் நகர மன்றம்

**// உண்மை நகல் //**

**மேலாளர் ,**
**திண்டிவனம் நகராட்சி.**

4/12/25

Scanned with OKEN Scanner